REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

அபராதமில்லை—சிறைவாசமில்லை! அமெரிக்காவில் புதுமுறைத் தண்டனை

சிறிய குற்றங்களுக்காக இளம் குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிப்பதில் ஒரு புதியமுறை கையாளப்படுகிறது.

குற்றவாளிகளுக்கு சிறைத் தண்டனையோ, அபராதமோ விதிக்கப்படுவதில்லை. மாறாக, 'அமெரிக்கப் புரட்சி'யின் ஒரு கட்டத்தைப்பற்றி 5,000 வார்த்தைகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதவேண்டும் என்பதே மாஜிஸ்திரேட் விதிக்கும் தண்டனையாம்! இத்தண்டனை விதிக்கப்பட்டதால் பல இளைஞர்கள் நல்லாராய்ச்சியுடன் சிறந்த கட்டுரைகள் எழுதியுள்ளனரென்றும், பல சங்கங்கள் அந்தக் கட்டுரைகளைக் கேட்பதாகவும் மாஜிஸ்திரேட் தெரிவித்துள்ளார்.

மலர் 4] சென்னை: சித்திரை 26உ புதன் (8—5—57) ★ ★ வெளியூர்: சித்திரை 27உ வியாழன் (9—5—57) இதழ் [282

டெல்லியின் அடிமையாக இருப்பதே அவர்கள் இலட்சியமாம்

அதனால் கழகத்தின் யோசனைகளை ஏற்பதற்கில்லையாம்

சட்டசபையில் மந்திரி சுப்பிரமணியம்

சென்னை, மே 8—

"திராவிட முன்னேற்றக் கழகம், 'சுதந்திரத் தமிழ்நாடு' என்ற இலட்சியத்தைக் கொண்டிருக்கிற வரையில், காங்கிரஸ் கட்சியும் தி. மு. கழகமும் எந்த ஒரு விவகாரத்திலும் ஒன்றுபட முடியாது.

"சுதந்திரத் தமிழ்நாடு என்ற அடிப்படையில் தி. மு. கழக உறுப்பினர்கள் கூறும் எந்த யோசனையையும் சர்க்கார் ஏற்க முடியாது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்"

என்று, சட்டசபை சர்க்கார் கட்சித் தலைவரும் நிதி மந்திரியுமான கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள் நேற்றைய சட்டசபைக் கூட்டத்தில் கவர்னர் உரை விவாதத்திற்குப் பதிலளிக்கையில் கூறினார்.

"காங்கிரஸ் கட்சிக்கும் தி. மு. கழகத்திற்கும் அடிப்படையிலேயே வேறுபாடு இருக்கிறது.

"வடநாடு வேறு—தமிழ்நாடு வேறு; வட நாட்டிலிருந்து பிரிந்தால்தான் தமிழ்நாட்டிற்கு நன்மை ஏற்படும்,' என்ற முறையில் பேசி, அதற்கான காரியங்களில் அவர்கள் ஈடுபடும் போது, 'ஒன்றுபட்ட இந்தியா' என்ற அடிப்படையில் செய்யும் எந்த நன்மையான காரியமும் அவர்களுக்குத் தீமை என்றே படும்.

"ஒன்றுபட்ட இந்தியா என்ற அடிப்படையில் இயங்கும் ஒரு சர்க்கார் செய்யும் நன்மைகளைக்கூட இவர்கள் எதிர்ப்பார்கள். எனவே இந்தப் பிரிவினையை அடிப்படையாக வைத்துக் கூறப்படும் யோசனைகளை சர்க்கார் ஏற்கத் தயாராக இல்லை என்று தெளிவாக்க விரும்புகிறேன்"

என்றும் அவர் கூறினார்.

தெளிவு இல்லையாம்

"மேலும், தி. மு. கழகத்தினரின் 'சுதந்திரத் தமிழ்நாடு' என்ற இலட்சியம் தெளிவுடையதாக இல்லை. தேர்தல் நேரத்தில் அதைக் கைவிட்டார்கள்; இப்போது, அதனை வலியுறுத்துகிறார்கள்; எனவே இதனை அவர்கள் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்"

என்றும் மந்திரியார் கூறினார்.

கழகத்தின் பெருநோக்கை அறிய முடியாத மந்திரி!

அண்ணாவின் யோசனையை சந்தேகிக்கிறார்

'வடநாடு வாழ்கிறது—தென்னாடு தேய்கிறது' என்ற உண்மை வெறும் அடுக்குச் சொல் அலங்காரமல்ல என்பதை, சர்க்கார் தந்த புள்ளி விவரங்களைக் காட்டி விளக்கிய அண்ணா அவர்கள், 'இந்தப் பேதாபேதங்களை அகற்றுவதில் சர்க்கார் எங்களை, 'சாப்பர்ஸ் அண்டு மைனர்கள்,' என்றவகையில் உபயோகித்துக் கொள்ளவேண்டும்,' என்று சட்டசபையில் ஒரு யோசனையைத் தெரிவித்தார்கள்.

இந்த யோசனை, எத்தனை பெருந்தன்மையான உள்ளத்திலிருந்து பிறந்தது என்பதை உணர முடியாத கனம் நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் பதில் கூறும்போது,

"இதனை நான் வரவேற்கிறேன்; ஆனால். 'சாப்பர்ஸ் மற்றும் மைனர்ஸ்' என்பவர்களிடம்தான் இராணுவத்தின் உயிரே ஒப்படைக்கப்படுகிறது. வழியில் உள்ள எதிரிகளின் கண்ணிகளையும், வெடிகளையும் அகற்றிவிட்டு, இவர்கள் புதிய கண்ணிகளையும் வைத்துவிட்டால் ஆபத்து அல்லவா நேரிடும்? எனவே, இந்த யோசனை பற்றி தீர்க்கமாக யோசிக்க வேண்டியிருக்கிறது.

"இரண்டு பிளவுபட்ட இலட்சியமுடையவர்கள் எவ்வளவு தூரம் ஒத்துழைக்கலாம் என்பதை யோசித்தே முடிவு செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கேரளத்தில் மதுவிலக்கு?

திருவனந்தபுரம், மே 7—

'கேரளத்தில் மதுவிலக்கு தோல்வியடைந்துவிட்டதால், மதுவிலக்குச் சட்டம் கைவிடப்படுமா?' என்று கேட்கப்பட்ட போது, முதலமைச்சர் மதுவிலக்கு சம்பந்தமாகப் பரிசீலனை செய்த பின்னர்தான் அதுபற்றி முடிவு செய்யப்படும் என்றும், கடந்த ஆண்டில் 7,000 குற்றங்களே ஏற்பட்டுள்ளன என்றும் பதிலளித்துள்ளார்.

சென்னை சட்ட சபை

மீண்டும் ஜூன் 24-ந் தேதி கூடும்

சென்னை, மே 7—

சென்னை சட்டசபையின் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பதாக இன்று சபைத் தலைவர் அறிவித்தார்.

சட்டசபை மீண்டும் ஜூன் 24-ந் தேதி கூடலாம் என்று சட்டசபை அலுவல் ஆலோசனைக் குழு சிபாரிசு செய்துள்ளது.

29-ந் தேதியன்று வரவு-செலவுத் திட்டம் சட்டசபையில் கொண்டு வரப்படலாம். ஜூலை 1-ந் தேதி முதல் 5-ந் தேதி வரையில் பொது விவாதமும், 6-ந் தேதியிலிருந்து 24-ந் தேதி வரையில் மானியக் கோரிக்கைகளும் விவாதிக்கப்படும். 26-ந் தேதியன்று மொத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது விவாதம் நடைபெறும் என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

சென்னை சர்க்கார் அதிகாரிகள் கோரிக்கை

திட்டக் குழுத் துணைத் தலைவர் கைவிரிப்பு

சென்னை, மே 8—

உணவு உற்பத்திக்கு அதிகமாக உரம் விநியோகிக்க வேண்டும் என்று சென்னை சர்க்கார் அதிகாரிகள், திட்டக் குழுவின் துணைத் தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களைக் கோரினராம்.

தற்போதைய நிலையில் அதிக அளவில் உரம் விநியோகம் செய்ய இயலாது என்றும், தங்கள் கைவசமுள்ள பசுந்தாள் உரம், கூளஎரு ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அதிகாரிகளிடம் அவர் கூறினாரென்றும் செய்தி தரப்பட்டிருக்கிறது.

வேலையில்லாத நிலைமை ஏன்?

கேரள அரசாங்கம் கண்டறிய முயற்சி

திருவனந்தபுரம், மே 7—

கேரளத்தில் கயிறு திரிக்கும் தொழிலாளர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருவதைத் தடுக்க கேரள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது.

உடனடியாக மாவட்ட கலெக்டர்கள் அப்பிரச்சினையில் 'துப்புறவு' நடத்தி அறிக்கை தயாரிக்குமாறு அரசாங்கம் உத்திரவிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நிலங்களின் விலை

கட்டுப்படுத்த புதிய சட்டம்

சென்னை, மே 7—

சேரி வாழ்வோருக்கு புது வாழ்வு அளிப்பதற்காக வசப்படுத்தப்படும் நிலங்களின் விலையைக் கட்டுப்படுத்த ஒரு தனிச் சட்டம் கொண்டுவரப்படும் என்று தெரியவருகிறது.

'தாயகத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயரிடாதது கண்டு வருந்துகிறோம்'!

எதிர்க் கட்சியினரின் திருத்தம் தோல்வி

காங்கிரசார் கைதூக்கத் துவங்கிவிட்டனர்

சென்னை, மே 8—

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நேற்று சட்டசபையில் நிறைவேறியது.

இந்தத் தீர்மானத்திற்கு நமது கழக உறுப்பினர்கள் பலரும் பல திருத்தங்களைத் தந்திருந்தனர்.

இதர எதிர்க் கட்சியினரும் திருத்தங்கள் கொடுத்திருந்தனர்.

சட்டசபை தி. மு. கழகத் தலைவரான அண்ணா அவர்கள், 'தமிழ்நாடு என்று மாநிலத்திற்குப் பெயரிடாததற்கு வருந்துகிறோம்' என்ற திருத்தத்தைத் தவிர ஏனையவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாகக் கூறினார்.

மற்ற பல திருத்தங்களும் வாபஸ் பெறப்பட்டன; சில நிராகரிக்கப்பட்டன.

'தமிழ் நாடு' பெயர் பற்றி, தோழர் என். கே. பழனிச்சாமி (கம்.) கொண்டுவந்த திருத்தத்தின்மீது வாக்கெடுப்பு நடைபெற்றது.

திருத்தத்திற்கு ஆதரவாக 42-பேர்களும், எதிராக 127-பேர்களும் வாக்களித்தனர்; ஒருவர் நடுநிலை வகித்தார். திருத்தம் தோல்வியுற்றது.

தாயகத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிடாதது குறித்து வருத்தம் தெரிவிக்கக்கூட மறுத்துவிட்டவர்கள் அனைவரும் காங்கிரசாராவர்.

இவர்களில் 'வடக்கெல்லைத் தளபதி' தோழர் கே. விநாயகமும் இருந்தார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

ஐவர் உண்ணா நோன்பு!

கராச்சி, மே 8—

சிட்டோ, பாக்தாத் ஒப்பந்தங்களிலிருந்து பாகிஸ்தான் விலக வேண்டும் என்று கோரி, பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் மாளிகைமுன் ஐவர் உண்ணா நோன்பு இருந்துவருகின்றனராம்.

கோட்டைவிட்ட மந்திரியின் குதர்க்கம்

தேவிகுளம்-பீர்மேடு: முடிந்துவிட்ட பிரச்சினையாம்

சென்னை, மே 8—

"தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ்ப் பகுதிகளைக் கோட்டைவிட்ட காங்கிரஸ் மந்திரிகள் இன்று, 'அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது' என்கின்றனர்.

கவர்னர் உரை விவாதத்திற்குப் பதிலளித்து நேற்று சட்டசபையில் பேசிய மந்திரி சுப்பிரமணியம் கூறியதாவது :—

"தேவிகுளம், பீர்மேடு பிரச்சினை முடிந்துவிட்ட ஒன்று; ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்ட முடிவுக்குக் கட்டுப்படுவதுதான் முறை. அதைவிட்டு எப்போதும் கிளர்ச்சி அரசியலில் ஈடுபட்டுக்கொண்டிருக்க முடியாது.

"இந்த நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வாழுகிற தமிழர்களை எல்லாம் நாம் இங்கு அழைத்துக்கொள்ள வேண்டும் என்பன போன்ற கருத்துக்கு சர்க்காரோ, காங்கிரசோ உடன்பட முடியாது."

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 8—5—57 புதன்

கைத்தறிகள் வாழ!

கடந்த ஞாயிறு முதல் சென்னையிலும், மற்றும் தமிழ் நாடெங்கிலும் கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறது.

கைத்தறித் துணிகளை மக்கள் வாங்கி அணிவதின் மூலம் நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைகிடைக்கச் செய்ய வேண்டும் என்பது — மக்களைத் தூண்டுவது விழாவின் நோக்கம் என்று கூறப்பட்டிருக்கிறது. இது நான்காவது ஆண்டாகக் கொண்டாடப்படும் கைத்தறி வாரமாகும்.

இந்த விழாவை ஒட்டி மக்களைக் கவருவதற்காகச் செய்யப்பட்டுள்ள பிரச்சாரங்கள், கொண்டாட்டங்கள், ஏற்பாடுகள் இவற்றுள், இந்த வாரம் வாங்கப்படும் கைத்தறி துணிகளுக்கு ரூபாய்க்கு இரண்டணா விதம் 'தள்ளுபடி' கிடைக்கும் என்பதும் முக்கியமான ஒன்றாகும்.

இந்தத் 'தள்ளுபடி' என்பது, சாதாரண காலத்தில், ரூபாய்க்கு ஒன்றரை அணா விதம் தரப்பட்டு வருகிறது.

இந்த உதவி அளிப்பதற்காகவும், இதுபோன்று இன்னும் நெசவாளர்களுக்கு சிறுசிறு உதவிகள் அளிப்பதற்காகவும், ஆலைத்துணிகள் மீது சர்க்கார் 'செஸ்' வரி விதித்து வருகிறார்கள்.

அதாவது, ஆலைத் துணிகளின் தயவில் நெசவாளர்களை வாழவைக்க சர்க்கார் முயற்சித்து வருகிறார்கள்.

கைத்தறி வாரம் கொண்டாடப்படும் இந்த நேரத்தில் நெசவுத் தொழிலின் இன்றைய பிரதான பிரச்சினைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வது சாலச் சிறந்ததாகும்.

நெசவாளர்களுக்கு, விருப்பமான ரக நூல் தங்குதடையின்றி கிடைக்கவேண்டும். அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகள் தேங்கிவிடாமல், விற்பனையாகிக் கொண்டிருக்க நிரந்தர 'மார்க்கெட்' வேண்டும்.

இவைதான், தொழில் சம்பந்தப்பட்ட இரண்டு மிகப் பிரதான பிரச்சினைகளாகும்.

இவை இரண்டிற்கும் சர்க்கார், இன்றுவரை உருவான பரிகாரம் தேடித்தரவில்லை என்றால், அது தவறல்ல!

கைத்தறிக்குத் தேவையான நூல், இனி 'அம்பர் சர்க்கா,' என்ற கைராட்டை மூலமே உற்பத்தி செய்யப்படும் என்று சர்க்கார் கூறியுள்ளது. இந்த 'அம்பர் சர்க்கா' மூலம் உற்பத்தி செய்யப்படும் நூல், கைத்தறி நெசவுக்கு எத்தனை தூரம் பயன்படும் என்பது, இன்னும் பரிட்சை நிலையிலிருப்பதாக சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் அவர்கள் கடந்த ஞாயிறன்று, நமது நிருபரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

பரிட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள 'அம்பர் இராட்டை'த் திட்டத்திற்கு இதுவரை இலட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

பரிட்சையிலிருக்கும் 'அம்பர் இராட்டை' உற்பத்தி செய்யும் நூல், கைத்தறி நெசவுக்கு எள்ளளவும் பயன்படப்போவதில்லை என்பது நெசவாளர் தெரிவிக்கும் கருத்தாக இருக்கிறது. ஆலை நூலைக்கொண்டு கைத்தறிகள் நெய்யும் துணிகளே—சில ரகங்கள், ஆலைத் துணிகளின் தரத்திற்கும் உழைப்பிற்கும் ஈடாக இல்லை என்ற மனக்குறை மக்களிடை இருக்கும்போது, 'அம்பர் இராட்டை' நூலைக்கொண்டு நெய்யப்படும் துணிக்கு மக்களின் வரவேற்பு எப்படியிருக்கும் என்பது யூகிக்கக்கூடியதே!

இந்த வகையில், கைத்தறியின் முதல் பிரதான பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதில் சர்க்காரின் போக்கு, தொழிலுக்கு அழிவைத் தேடித்தந்து, கைநெசவுத் தொழிலாளர்களின் வாழ்வைப் பறிப்பதாகத்தான் அமையுமோவென அஞ்ச வேண்டியதாயுள்ளது.

இரண்டாவது, நெய்யப்பட்ட துணிகளுக்கு 'மார்க்கெட்' தேடுவது என்ற பிரச்சினையாகும்.

இதற்கும் சர்க்கார், ஒரு நிரந்தரமான பரிகாரம் தேட முன்வரவில்லை.

துவக்கத்தில் கூறியபடி ஆலைத் துணிகளுக்கு விதிக்கப்படும் 'செஸ்' வரி மூலம் கைத்தறிக்குப் பாதுகாப்புத்தர சர்க்கார் முயலுகிறார்கள்.

ஆனால் மூன்றாண்டுகளுக்குள் ரூ. 17 கோடிவரை அப்படி வரி விதிக்கப்பட்டு கைத்தறித் தொழிலுக்கு அந்தத் தொகை உதவப்பட்டிருந்தும், சர்க்கார் எதிர்பார்க்கிற பலன் கிடைக்காவிட்டால் இந்த ஏற்பாட்டினால் பலன் இல்லை.

மக்களுக்கு இரண்டணா தள்ளுபடி தருகிறோம் என்ற ஏற்பாடு, அவர்களது நிரந்தரமான கருணையை கைத்தறித் துணிகளுக்குப்பெற்றுத்தரும் என்பது என்ன நிச்சயம்? கைத்தறிகளுக்கு என்று பிரத்தியேகமான சில ரகத் துணிகளை ஒதுக்கித் தருவதின் மூலம் தான், அந்தத் தொழிலுக்கு ஒரு நல்ல பாதுகாப்புத் தர முடியும்.

ஆனால், டில்லியில் உள்ள பெரியவர்களோ, இந்தத் தொழிலுக்கு ஒரு தற்காலிகமான மூச்சுத்தந்து, பின்னர் படிப்படியாக கழுத்தை நெறித்துக் கொன்றுவிட வேண்டும் என்ற எண்ணங்கொண்டவர்களாகவே இருக்கின்றனர் என்பதை, அவர்களது விசைத்தறித் திணிப்பு தெளிவாக்கியுள்ளது. இந்த விசைத்தறியினால் வரக்கூடிய ஆபத்தை இந்த மாநில கைத்தறி நெசவாளர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

எனவே, தொழிலுக்குத் தோன்றிய நெருக்கடியின் போது, வேறெவரும் — அரசாங்கம் கூடத்தான் — உதவ முன்வர யோசித்துக் கொண்டிருந்த நிலையில், நெசவாளர் துயர் துடைக்கும் ஆக்கப் பணியில் ஈடுபட்டு, அவர்களுக்கு வாழ்வளிப்பதில் பெருமுயற்சியும் அக்கறையும் எடுத்துக் கொண்டவர்கள் என்ற பெருமையும் உரிமையும் உடைய நாம், நெசவாளர்கள் விழா கொண்டாடும் இந்த நேரத்தில், தங்களுடைய பிரச்சினைகளைப் புரிந்துகொண்டாக வேண்டும்—என்றென்றைக்கும் ஆலைத்துணிதரும் 'செஸ்' நிதியிலும், மக்கள் காட்டும் இரக்கத்திலும் ஜீவிக்கமுடியாது—ஜீவிக்க நினைப்பது பாதுகாப்பானதல்ல என்பதை உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்ப் பெருமக்களின் பெருந்தன்மை

சான்றுகள் பல எடுத்துக்காட்டி சட்டசபையில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி விளக்கம்

3—5—57-ல் நடைபெற்ற சென்னை சட்டசபைக் கூட்டத்தில், கவர்னர் உரைமீது நடைபெற்ற விவாதத்தின்போது, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் ஆற்றிய கருத்துரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"15 பகுதிகளைக் கொண்ட கவர்னர் அவர்களின் பேருரை எல்லோராலும் ஒப்புக்கொள்ளத் தக்கதாகவோ, ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவோ அமையவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னர் அவர்களின் பேருரை என்பது அந்த வருடத்தின் அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை பெரும்பாலும் மேற்கொள்ளப்போகிறது என்பதை மேலெழுந்தவாரியாக எடுத்துக் காட்டுகிற ஒன்றாகும்.

"அந்தப் பேருரையில் முக்கியமான பல பிரச்சினைகள் சேர்க்கப்படாதது மிகமிக வருந்தத்தக்கது. குறிப்பாக இந்த நாட்டில் அதிகமாக வளர்ந்து வருகிற பிச்சைக்காரர்களுடைய எண்ணிக்கையை ஒழிப்பதற்கு — அவர்களுடைய தொல்லைகளை அகற்றுவதற்கு இந்த சர்க்கார் எந்தவிதமான திட்டமும் தரவில்லை.

இரண்டாவதாக, இலங்கை வாழ் தமிழர்களின் நிலைமை—இன்றைய அவர்களுடைய பிரச்சினைக்கு எந்தவிதத் திட்டமும் தரப்படவில்லை.

"மூன்றாவதாக, சுயமரியாதைத் திருமணம் சட்டப்படியாக செல்லுபடியாகாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தும் இதைப்பற்றி இதற்குமுன் சபையில் உறுப்பினர்களால் விவாதம் செய்யப்பட்டிருந்தும் கூட, அதை இதில் சேர்க்கப்படாதது மிகமிக வருந்தத்தக்கதாகும்.

"தேர்தல் அமைதியாகவும் அசம்பாவித நிகழ்ச்சிகள் இல்லாமலும், பாரபட்சமற்ற தன்மையிலும் நடந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது;

"தேர்தல் பாரபட்சமற்ற தன்மையில் நடந்ததா என்றால், 'இல்லவே இல்லை' என்பதை நிச்சயமாகக் கூற முடியும். உலகத்திலுள்ள மற்ற சனநாயக முறைகளிலெல்லாம் தேர்தல் காலத்தின் போது ஆளுகிற கட்சியில் உள்ள அமைச்சர்கள், அமைச்சர் பதவியில் இருந்தாலும்கூட அவர்கள், தேர்தலுக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ எவ்விதக் காரியங்களிலும் ஈடுபடுவது கிடையாது. ஆனால் உண்மையில், தேர்தலின்போது இங்கு ஆட்சிபீடத்தில் உள்ள அமைச்சர்கள் மக்களிடத்திலே ஓட்டுகளை கேட்கிற முறையில் பல உறுதி மொழிகளைக் கொடுத்தார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் என்.ஜி.ஓ.-க்களுக்கு 'அலவன்ஸ்' உயர்வைத் தேர்தல் காலத்தின் போது தான் கூட்டினார்கள். அதற்கு முன்னால் அவர்களுடைய கோரிக்கை இந்த அரசாங்கத்தின் முன்பு இருந்தும்கூட அதற்கு ஒன்றும் செய்யப்படவில்லை. அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிபூரணமாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்கிற அக்கறை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உண்டு. ஆனால், தேர்தல் காலத்தில் இவ்வித உறுதி மொழிகள் தரப்படக் கூடாது. ஆனால், இங்கு ஆளும் கட்சியில் உள்ள அமைச்சர்கள், ஓட்டுக் கேட்பதற்காக இவ்விதமாக ஒரு சனநாயக விரோதச் செயல்களில் இறங்கினார்கள்.

"அடுத்தபடியாக, மந்திரியாக இருந்தவர்கள், 'மந்திரி' என்ற தோரணையோடு மக்களை அணுகி 'ஓட்டு' கேட்டார்கள்—எல்லா உறுதி மொழிகளையும் அளித்தார்கள். முதன் மந்திரியாக இருக்கிற காமராசர் அவர்கள், 'எஸ். எஸ். எல். சி. வரை இலவசக் கல்வி எல்லோருக்கும் அளிக்கப்படும்,' என்று தேர்தல் காலத்தில் குறிப்பிட்டார்கள். இவ்விதமெல்லாம் அமைச்சர்கள் உறுதி மொழி கொடுத்ததினால்தான் அவர்கள் ஓட்டுப்பெற முடிந்தது. இதெல்லாம், பல இடங்களிலும் பல அசம்பாவிதங்களும், பாரபட்சமற்றதன்மையும் சில அதிகாரிகளிடத்தில் காணமுடிந்தது. வாகனாதிகளில் வாக்காளர்களை ஏற்றிக்கொண்டு சென்று ஓட்டுப் போடச் செய்தார்கள்.

"இந்த மாதிரி ஊழல்கள் இருந்தாலுங்கூட அமைதியான முறையில் தேர்தல் நடந்தது என்றால், அதற்குக் காரணம், பொதுமக்கள் மாத்திரமல்ல—பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லாத எங்களைப் போன்ற எதிர்க்கட்சிக்காரர்கள் தான் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"இந்தத் தேர்தல் அசம்பாவிதமற்ற முறையிலும் பாரபட்சமற்ற தன்மையிலும் நடந்திருக்குமானால் இன்று எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிற நாங்கள், ஆளும் கட்சியினராக மாறியிருப்போம். அந்த அளவுக்கு ஒழுங்கீனங்கள் நடந்திருக்கின்றன. ஆகவே, கவர்னர் அவர்கள் பேருரையில் குறிப்பிட்டிருப்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம்.

"இரண்டாவதாக, மொழிவழியாக மாநிலப் புனரமைப்பு ஏற்பட்டபோது மிகவும் மகிழ்ச்சிகரமாகவும், சுலபமாகவும், சுமூகமாகவும் நடந்திருப்பதாக கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்; அதுவும் ஏற்றுக்கொள்ளகூடியது அல்ல.

"மொழிவழி மாகாண புனரமைப்பு இன்னும் முடிவுபெறவில்லை; பரிபூரணமான அளவுக்கு அது மகிழ்ச்சிகரமானதாகஇல்லை. வேண்டுமானால், கேரளர்களுக்கு மகிழ்ச்சி இருக்கலாம்; ஆந்திரர்களுக்கு மகிழ்ச்சி இருக்கலாம்; கர்நாடகர்களுக்கு மகிழ்ச்சி இருக்கலாம்; ஆனால் நிச்சயமாக தமிழர்களுக்கு இருக்கவே முடியாது.

"நாம் இழந்த தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் நமக்கு திரும்பக் கிடைக்கிற வரையிலும் தமிழர்களுக்கு மகிழ்ச்சி இருக்கமுடியாது. ஆனால் நாம், கேரளர்களுக்கும், ஆந்திரர்களுக்கும், கர்நாடகக்காரர்களுக்கும் விரோதம் உண்டுபண்ணவேண்டும் என்கிற நிலையில் பேசுவதாக நினைக்க வேண்டாம்; எனக்கும் அந்த நினைப்பு கிடையாது — நான் பிறந்து வளர்ந்த தமிழர் பரம்பரைக்கும் அந்த எண்ணம் கிடையாது.

"நாம் மற்றவர்களைவிட பெருந்தன்மையினராக இருக்கிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய கவர்னர் பெருமான் அவர்கள் கேரள நாட்டைச் சேர்ந்தவராக இருந்தும் அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றால், அது நம் பெருந்தன்மையைத்தான் காட்டுகிறது. நமது மதிப்புக்குரிய அவைத் தலைவர் கிருஷ்ணராவ் அவர்கள் கர்நாடக நாட்டைச் சார்ந்தவராக இருந்தும் அவரை ஏற்றுக் கொண்டிருக்கிறோமென்றால், அதுவும் நம் பெருந்தன்மையைக் காட்டுகிறது. அதுமாத்திரமல்ல—இந்தச் சபையின் உதவித் தலைவர் பக்தவத்சலு நாயுடு அவர்கள் ஆந்திர நாட்டைச் சேர்ந்தவராக இருந்தும் அவரை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றால், அதுவும் நம் பெருந்தன்மையைத்தான் காட்டுகிறது.

"மேலும், சென்னை மாநிலத்தின் சரித்திரத்தைப் பார்த்தால் நமது பெருந்தன்மைக்கு இன்னும் பல உதாரணங்கள் கிடைக்கும். மாண்ட்போர்டு சீர்திருத்தத்தைப்பற்றி அறிந்தவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். 1921-ம் ஆண்டில் சென்னை மாநிலத்தில் திரு. சுப்பராயலு(ரெட்டியார்) முதல் மந்திரியாக இருந்தார்—அவர் ஓர் ஆந்திரர்; அதற்குப் பிறகு, பானகல் அரசர் முதல் மந்திரியாக இருந்தார்—அவரும் ஒரு ஆந்திரர்; அதற்குப் பிறகு டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் ஆட்சிக்கு வந்தார்; அவர் தமிழராக இருந்தபோதிலும் பானகல் அரசர் கருத்திற்கும், விருப்பத்திற்கும் மாறாக நடந்துகொள்ளமாட்டார். அவருக்குப் பிறகு, பொல்லினி முனிசாமி(நாயுடு) பதவிக்கு வந்தார்—அவரும் ஒரு ஆந்திரர்; அவருக்குப் பின்னால் பொப்பிலி அரசர் முதன் மந்திரியானார்—அவரும் ஆந்திரர்; அதற்குப் பிறகு திரு. இராசகோபாலாச்சாரியார் முதல் மந்திரியானார்—அவரைத் தமிழர் என்று சொல்ல முடியாது. அதனால் அவரை, 'நாடற்றவர்' என்று சொல்வதாகக் கருத வேண்டாம்; அவர் எல்லா நாடுகளுக்கும் உரியவர். அடுத்தாற்போல் திரு. பிரகாசம் முதல் மந்திரியானர்—அவரும் ஒரு ஆந்திரர்; அதற்குப் பிறகு ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் வந்தார்—அவரும் ஒரு ஆந்திரர்; அதற்குப் பிறகு திரு. குமாரசாமி இராசா வந்தார்—அவரும் ஒரு ஆந்திரர்; அதற்குப் பிறகும் திரு. இராசகோபாலாச்சாரியார் முதல் மந்திரியானார்; அவருக்குப் பிறகு கடைசியாக இப்பொழுது முதல் அமைச்சராக இருப்பவர் பச்சைத் தமிழரான திரு. காமராசர். (ஆரவாரம்)

"இந்தமாதிரித் தமிழரான திரு. காமராசர், தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளை மீட்டுத் தருவதாக உறுதி கூறினார், இதே சட்ட மன்றத்தில்; கனம் நிதி அமைச்சர் அவர்கள், 'தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் தமிழர்களுக்குச் சேர வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றினார்; ஆனால், அவைகள் நமக்குக் கிடைக்கவில்லை.

"தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளை பெற்றால்தான் நமக்கு மகிழ்ச்சி; 'குளமாவது—மேடாவது? எங்கே இருந்தால் என்ன?'—என்று சொல்லாமல், அவைகளை நாம் பெறுவதற்கு எல்லாவித முயற்சியும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளைப் பெற இரண்டே வழிகள் உள்ளன; ஒன்று—ஒரு தேர்தல் மூலமாக அப்பகுதிகளை அடைய முயற்சித்தல்; மற்றொன்று—

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியா போன்ற நாட்டில் பஞ்ச நிலைமை ஏற்படுவது சகஜந்தானும்!

விலை குறையாததற்குப் பீதியே காரணமாம்

தென்னாட்டிற்குப் பஞ்சமென்ற பயமில்லையாம்!

"இந்தியா போன்ற பெரிய நாட்டில் சில இடங்களில் பஞ்ச நிலைமை ஏற்படுவது வழக்கமேயாகும்; நாட்டில் எந்த அவசர நிலைமையையும் சமாளிக்க இந்திய அரசாங்கம் போதிய உணவுத் தானியங்களைக் கையிருப்பாக வைத்திருக்கிறது"

என்று மத்திய உணவு உதவி அமைச்சர் கிருஷ்ணப்பா நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

"பற்றாக்குறை என்பது வெறும் பீதியை உண்டுபண்ணிவிடுகிறது. மக்களுக்கு வேண்டியது நம்பிக்கையேயாகும்; விலைவாசிகள் குறையாததற்குப் பீதியே காரணமாகும்; இந்த நிலைமை பதுக்கல் செய்பவர்களுக்கு சாதகமாக இருக்கிறது" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

1956—57-ல் இறக்குமதி அதிகரித்திருப்பதற்குக் காரணம் எந்த நெருக்கடியையும் சமாளிப்பதற்கான முன்னேற்பாடுதான் என்றும் தென்னாட்டில் உணவுப் பஞ்சம் இல்லை என்றும் அரிசி, கோதுமை, நிலக்கடலை, கரும்பு; பருத்தி, முறையே 5, 4, 6, 7, 20 சதவிகிதம் உற்பத்தியில் அதிகரித்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அரிசி விலை குறையுமாம்!

மத்திய அமைச்சரின் நம்பிக்கை

புதுடில்லி, மே 6—

நாட்டின் உணவு நிலைமை மொத்தத்தில் கட்டுக்கு அடங்கியே உள்ளதாம்!

மத்திய அமைச்சர் ஜெயின் நிருபர்களிடம் இவ்வாறு கூறிவிட்டு, மேலும் தெரிவித்திருப்பதாவது!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 60 இலட்சம் டன் உணவுத் தானியம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இப்போது அந்த வரம்பைவிட அதிகமாகவே இறக்குமதி செய்யப்படும்.

"நியாய விலைக்கடைகள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட தானியங்களை வழங்கி, பற்றாக்குறையைச் சமாளித்து, விலை ஏற்றத்தைத்தடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

"மண்டலங்களுக்கிடையே கூட உணவு போக்குவரத்து சம்பந்தமாக தடைகள் விதித்தலும், பற்றாக்குறை பகுதிகளுக்கு உணவளிக்க உபரி பகுதிகளில் அரசாங்கக் கொள்முதல் செய்தலும் நடைபெறக்கூடும்."

மீனவர் குடும்பத்திற்கு புதிய இடங்கள்

ரூ. 26 இலட்சம் செலவில் திட்டம் தயாரிப்பாம்

சென்னை, மே 6—

காசிமேடு இராணுவ நிலத்திலிருந்தும் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட இடத்திலிருந்தும் வெளியேற்றப்படும் மீனவர் குடும்பத்திற்கு, வட சென்னையில் 5 இடங்களில் மனைகள் கொடுக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

ஒரு குடும்பத்திற்கு 3/4 மனை வீதம் 258 குடும்பங்களுக்குத் தரப்படுமாம்.

இந்தக் குடும்பத்தினரைக் குடி அமைப்பு செய்வதற்காக கைத்தொழில் வர்த்தக உதவி டைரக்டர் ரூ. 26 இலட்சம் செலவில் திட்டம் தயாரித்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உடனடி நிலத்தை வாங்க அரசாங்கம் ரூ. 1,61,250 அனுமதித்துள்ளது.

கடற்கரையில் மண் அரிப்புத் தடுப்பு, அணை கட்டும் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

மகாதேவன் மறைவு

சென்னை, மே 5—

புகழ்பெற்ற எழுத்தாளரும், 'ஆனந்தவிகடன்' நிர்வாக ஆசிரியருமான திரு. மகாதேவன் அவர்கள் நேற்று பிற்பகல் இயற்கையெய்திய செய்தியை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று இரவு 7-30 மணிக்கு சென்னை—மயிலாப்பூர் இடுகாட்டில் நடைபெற்றபோது, எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும், கலைஞர்களும், மற்றதுறை பெரியோர்களும், திரளாகக் கலந்துகொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.

15 நாள் ஊதியம் வெகுமதியாம்!

மேட்டூர் தொழிலாளருக்கு நிவாரணம் கிடைக்கிறது!

புதுடில்லி, மே 6—

சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணை, மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் தொழிலாளருக்கு எதிராக நிர்வாகிகள் அப்பீல் செய்துள்ளனர். இந்த அப்பீலின் முடிவு தெரிவதற்குள் இடைக்கால நிவாரணமாக 15 நாள் ஊதியத்தை வெகுமதியாகவும், ஊதிய வித்தியாசத்தில் 50 சதவிகிதம் உயர்த்தியும் அளிக்கப்படவேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

ஊதிய உயர்வு சம்பந்தமாக தொழிலாளர்களுக்கும்—நிர்வாகிகளுக்கும் தொழில் மன்றத்தில் நடைபெற்ற வழக்கில், அடிப்படை ஊதியத்தை உயர்த்தும்படி தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த ஆலையில் 100 குமாஸ்தாக்களும், 1985 தொழிலாளர்களும் வேலை செய்து வருகின்றனர்.

தொழில் மன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக நிர்வாகிகள் மனு செய்துக் கொண்டுள்ளனர்.

சிலர் ரூ. 500 - பலர் ரூ. 350 பெறுவராம்!

'எல்லோரும் கம்யூனிஸ்டுகள் அல்ல' என்கிறார் அமைச்சர்

கேரள அமைச்சரவையிலுள்ளவர்கள் அனைவருமே கம்யூனிஸ்டுகள் அல்ல என்பதால்தான், அமைச்சர்களின் ஊதியம் ரூ. 500 என்று நிர்ணயிக்கப்பட்டதாம்.

'ஆனால், அமைச்சர்களில் பெரும்பாலோர் ரூ. 350-க்கு மேல் பெற்றுக்கொள்ள மாட்டார்கள்' என்று கம்யூனிஸ்டு ஏ. கே. கோபாலன் தெரிவித்துள்ளார்.

ஆந்திரம் பிரிவு என். ஜி. ஓ.-க்களுக்கு வெகுமதி

நபருக்கு ரூ. 200 தர முடிவு

ஆந்திரா பிரிவைச் சேர்ந்த என். ஜி. ஓ.-க்கள் அனைவருக்கும் ரூ. 200 இலவசமாகத் தருவது என முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

புதிய மாநில அமைப்பின் விளைவாக சென்னையிலிருந்தும் ஐதராபாத், கர்னூல், குண்டூர் ஆகிய இடங்களுக்கு மாற்றப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்த சலுகை தரப்படுமாம்.

ஒரு கோடி மக்களின் ஆதாரத் தொழில்

கைத்தறி நெசவாளர்நிலை பற்றிய புள்ளி விவரம்

கைத்தறித் தொழில் இந்தியாவிலுள்ள மிகப் பழைமையான குடிசைத் தொழில்களில் ஒன்றாகும். இத்தொழில் சுமார் 20-இலட்சத்திற்கு மேற்பட்ட நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துவருகிறது; அதாவது, சுமார் ஒரு கோடி மக்களுக்கு இது ஆதாரமாக இருந்துவருகிறது.

கைத்தறித் தொழிலுக்கான அபிவிருத்தித் திட்டம் 1953 செப்டம்பரில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1957 மார்ச் வரையில் இந்திய சர்க்கார் இத்தொழிலின் உதவிக்காக ரூ. 17,70,00,000 அனுமதித்துள்ளனர்.

இப்போது நாட்டில் சுமார் 7,000-க்கும் அதிகமான நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. கூட்டுறவு முறையின் கீழ் வந்துள்ள நெசவாளர்களின் எண்ணிக்கை 1953-ல், 6,28,000 ஆக இருந்தது; 1956 மார்ச்சில், அது, 10,27,600 ஆக அதிகரித்திருக்கிறதாம்!

1956-ம் ஆண்டில் மொத்தம் 154,10,00,000 கெசம் கைத்தறித் துணி உற்பத்தியாயிற்று; ஆனால், இது 1955-ல், 147,30,00,000 கெசமாகவும், 1954-ல் 131,80,00,000 கெசமாகவும், 1953-ல் 120 கோடி கெசமாகவும் இருந்ததாம்.

சிறந்த ரகக் கைத்தறி சாதனங்களின் தேவைகளைச் சமாளிப்பதற்காக கைத்தறி சாதனங்களையும், துணைச் சாதனங்களையும் தயார் செய்வதற்கான ஒரு பட்டறையை அமைப்பதற்கு சென்னை சர்க்காருக்கு மத்திய சர்க்கார் ரூ. $14\frac{1}{2}$ இலட்சம் கடன் அனுமதித்துள்ளனராம்.

கைத்தறிக்கான சிறந்த சாதனங்களை வாங்குவதற்காக ஒவ்வொரு நெசவாளருக்கும் மொத்தமாக ரூ. 218 மானியம் வழங்க சர்க்கார் முடிவு செய்துள்ளனர். இந்தத் தொகையை, புதுமாதிரி 'பிரேம்' தறி வாங்குவதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். சாதாரணத் தறிகளைவிட பிரேம் தறிகளில் அதிக அளவு துணி உற்பத்தி செய்ய முடியுமாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கைத்தறித்துறையில் அதிகப்படியாக 100 கோடி கெசம் துணி உற்பத்தியளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; இதில் 70 கோடி கெசம் துணி, ஆலை நூலைக் கொண்டும், பாகி 30 கோடி கெசம் துணி 'அம்பர் சர்க்கா' நூலைக்கொண்டும் தயாரிக்கப்படுமாம்.

கைத்தறித் தொழில் அபிவிருத்திக்கு இரண்டாவது திட்டத்தில் மொத்தம் ரூ. $59\frac{1}{2}$ கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும், இத்திட்டங்களில் பெரும்பகுதி மாநில சர்க்கார்களாலேயே நிறைவேற்றப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நெசவாளர்கள் குடியிருப்பதற்காக இதுவரையில் மொத்தம் 12 காலனிகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்தக் காலனிகளில் மொத்தம் 1,163 வீடுகள் கட்டப்படும். கூட்டுறவு முயற்சியில் உருவாக்கப்படும் இந்த வீடுகள் நெசவாளர்களின் தொழில் பட்டறைகளாகவும் உபயோகப்படுத்தப்படும். இக்காலனிகளில் சாயந்தோய்ப்பது, வேலை தீர்மானம், பசை போட்டுப் பக்குவம் செய்வது (காலண்டரிங்) முதலிய காரியங்களுக்காகப பொதுவான பக்குவக் கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படும்.

இக்காலனிகளில் கட்டிப்படும் ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ. 3,600 ரூபாய் செலவு வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதில் மூன்றில் ஒரு பகுதித் தொகை உதவித் தொகையாகவும், பாக்கி 25 ஆண்டுகளில் திருப்பிக்

447 தேர்தல் மனுக்கள் பதிவு

புதுடில்லி, மே 6—

மே 3-ந் தேதிவரை மொத்தம் 447 தேர்தல் எதிர் வழக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் குழு அறிவித்துள்ளது. இவைகளில் மக்கள்சபை சம்பந்தப்பட்டவை 46; சட்டசபை சம்பந்தப்பட்டவை 401 மனுக்கள் என்று தெரியவருகிறது.

பீடித் தொழிலுக்குத் தனிச் சட்டம்?

குடிசைத் தொழிலாகக் கருதக் கூடாதாம்!

சென்னை, மே 7—

பீடித் தொழிலைப்பற்றிய விசாரணைபற்றிய அறிக்கை சென்னை அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை, மேல்சபை உறுப்பினர்களுக்குத் தரப்பட்டுள்ளது.

பீடித் தொழிலை சீர்திருத்தி அமைக்க ஒரு தனிச்சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், இந்தத் தொழிலை ஒரு குடிசைத் தொழிலாகக் கருதுவதைக் கைவிட வேண்டுமென்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

டட்லி சேனநாயகா பொய்க்கூற்று!

இலங்கைத் தமிழரைத் துரத்த இந்தத் திட்டமா?

கொழும்பு, மே 6—

வாக்குரிமை இல்லாது இலங்கையில் வாழும்தமிழருக்குக் குடியுரிமை அளிக்க பண்டாரநாயகா அரசாங்கம் முடிவு செய்வது, இலங்கையின் குடிமக்களாகிய சிங்கள மொழியினருக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்துமாம்!

இவ்வாறு பண்டாவின் ஆட்சியைக் கண்டித்து குரேனகல்லா மண்டபத்தில் நடைபெற்ற ஒற்றுமை தேசிய கட்சியின் கூட்டத்தில் முன்னாள் இலங்கை பிரதமர் டட்லி சேனநாயகா பேசுகையில் தெரிவித்துள்ளார்.

தன் தந்தை 50,000 இந்தியர்களுக்கு மட்டுமே குடியுரிமை அளிப்பதென்று எண்ணியிருந்தார் என்றும், ஆனால் பண்டாரநாயகா எல்லா இந்தியர்களையும் இலங்கை குடிமக்களாக்க முனைந்துள்ளார் என்றும் பழிசுமத்திப் பேசினாராம்!

கழிஞ்சூர் ஊராட்சி மன்றம்

இரு கழகத் தோழர்கள் போட்டியின்றித் தேர்வு

கழிஞ்சூர், மே 5—

30—4—57 பகல் 2 மணிக்கு இவ்வூர் பள்ளியில் நடைபெற்ற ஊராண்மைக் கழகத் தேர்தலில், கழிஞ்சூர் தி. மு. கழகத் தோழர்கள் கோ. இராமு, சொக்கலிங்கம் ஆகிய இருவரும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கைத்தறித் துணி

1956-ல் 6 கோடி கெஜம் ஏற்றுமதியாயிற்றும்

புதுடில்லி, மே 6—

1956-ம் ஆண்டில் மொத்தம் 5,97,86,000 கெஜம் துணி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாம், இதன் மதிப்பு ரூ. $8\frac{1}{2}$ கோடிக்கு அதிகமிருக்குமாம்.

இலங்கை, நைஜீரியா,மலேயா. ஏடன், சூடான், சிங்கப்பூர், கெனியா, தங்கனீகா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்தியக் கைத்தறித் துணியை ஆதரித்துள்ளனவாம்.

கொடுக்கப்பட வேண்டிய நீண்டகாலக் கடன் தொகையாகவும் இருக்குமாம்.

பொறியியல் பட்டதாரிகட்கு!

தொழில்களில் தெரிவியல் பயிற்சி

சென்னை, மே 6—

1957—58-ம் ஆண்டில் நேரடிப் பயிற்சி உதவி ஊதியத் திட்டத்தின் கீழ் தென்னாட்டில் பொறியியல் துறையில் பட்டம் பெற்றுள்ள 240 பேர்களுக்குக்கும் 'டிப்ளமோ' பட்டம் பெற்றுள்ள 130 பேர்களுக்கும் தொழில் பயிற்சியளிக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 130 வீதமும், 'டிப்ளமோ' பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 100 வீதமும் உதவி ஊதியம் பயிற்சிக்காலமான ஓராண்டுக் காலத்திற்கு அளிக்கப்படுமாம்.

அன்பளிப்புகள்

திருமணங்கள்

28—4—57 காலை 9-மணியளவில், சென்னை தோழர் ஏ. தாஸ் — தோழியர் சண்முகவள்ளி வாழ்க்கை ஒப்பந்த விழா தோழியர் சத்தியவாணி-முத்து அவர்கள் தலைமையில், சென்னை-சூளை, கலியாணமேஸ்திரி தோட்டம், மணமகள் இல்லத்தில் நடைபெற்றது.

மணமக்களைப் பாராட்டியும் - வாழ்த்தியும் தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், மு. கன்னியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

11—4—57-ல் நடைபெற்ற, விழுப்புரம் தோழர் ப. சங்கரன் — தோழியர் இந்திராணி வாழ்க்கை ஒப்பந்த விழாவின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

11—4—57-ல், நெல்லை மாவட்டம், சிவகிரி தோழர் அரு. சமுதன்—தோழியர் பூங்கோதை ஆகியோருக்கு, சிவகிரி அருணா நிலையத்தில் நடைபெற்ற திருமணத்தின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

★

காதணி விழா

21—4—57 காலை 8 மணிக்கு, பந்தநல்லூர் தி. மு. கழகத் தோழர் எம். கண்ணு அவர்களின் செல்வர்கள் மகாலிங்கம்—இராசலிங்கம் ஆகிய இருவருக்கும் காதணி விழா தோழர் பொ. தருமன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் ம. கோ. மணி, தமிழ்வேந்தன், ச. கலியாணராமன், பி. ஏ. லிங்கன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு தோழர் பி. ஏ. லிங்கன் வசம் அன்பளிப்பாகத் தப்பட்ட ரூ. 1 வரப்பெற்றோம்.

★

பிறப்பு

19—4—57-ல், திருப்பதி தோழர் தங்கவேலன் அவர்களது துணைவியார் ஒரு ஆண்மகவுக்குத் தாயானார்கள்; இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

4—4—57 இரவு 12 மணிக்கு, சென்னை 18-வது வட்ட கழகத் தோழர் எம். மாரிமுத்து அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் சேமத்தம்மாள் ஓர் பெண் மகவுக்குத் தாயானார்கள். அப்பெண் மகவுக்கு, தோழர் நாராயணசாமி அவர்களால் 'மரகதம்' எனப் பெயர் சூட்டப்பட்டது; அதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

தமிழுக்குத் தனிச் சிறப்பு அளிக்கப்படுகிறதா?

‘இலங்கைப் பிரதமரின் அறிக்கை வெறும் கண்துடைப்பே ஆகும்’

‘நல்லுறவு மனப்பான்மை சிதறிவிட்டது’

இலங்கை தி. மு. கழகம் குரல் எழுப்புகிறது

கொழும்பு, மே 8—

தமிழ் மொழியைப் புறக்கணிக்க இலங்கையில் நடைபெற்று வரும் சதித் திட்டங்களுக்கு எதிராக இலங்கை தி. மு. கழகம் அறிக்கை ஒன்று விடுத்துள்ளது.

இலங்கைப் பிரதமர் பண்டார நாயகா, சமீபத்தில், ‘தமிழ் மொழிக்கு நியாயமான அந்தஸ்து அளிக்கப்படும்’ என்று கூறியதைப் பற்றி, இலங்கை தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டபின், கீழ்க்கண்ட அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது:—

“ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இலங்கை இருந்தபோது, ஆட்சி மொழியாக ஆங்கிலம் வழங்கப்பட்ட நேரத்தில், இலங்கையில் தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட்டிருந்தது; இலங்கையின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இந்த உண்மை வெளிப்படும்; இதை எவரும் மறுக்கவும் முடியாது.

“அதற்குப் பின், இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி சார்பில், இலங்கையின் ஆட்சி மொழிகளாக தமிழ், சிங்களம் இரண்டும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

“ஆனால், கடந்த ஜூன் திங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள தமிழ் ஒழிப்புச் சட்டம் பாரபட்சத்துடன் செய்யப்பட்டிருப்பதால், இலங்கையில் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே நிலவிய நல்லெண்ணமும், ஒற்றுமை மனப்பான்மையும் சிதறிவிட்டது.

“இப்போது நிலவும், அமைதியின்மை, பிளவு, வகுப்பு வேற்றுமைகள் ஆகியவை, வெளிநாடுகளில் இலங்கைக்கு உள்ள மதிப்பைக் குறைத்துள்ளது.

“அமைதியை நிலைநாட்ட எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வியுற்ற பின்னர், ‘தமிழ் மொழிக்கு நியாயமான அந்தஸ்து தரப்படும்’ என்று பண்டாரநாயகா கூறுவதை ‘வெறும் சொல்லலங்காரம்’ என்று இலங்கை தி. மு. கழகம் கருதுவதுடன், உண்மையை மறைக்கச் செய்யும் கண்துடைப்பு என்றும் கருதுகிறது.

“சட்டத்தில் செய்யவேண்டிய மாற்றத்தை உடனடியாகச் செய்து, தமிழ் மொழிக்கும் ஆட்சி மொழி அந்தஸ்து அளிக்க வேண்டும் என்றும், அதுவே அமைதியை நிலைநாட்ட தக்க வழி என்றும் இலங்கை தி. மு. கழகம் எடுத்துரைக்கிறது; அல்லது சிங்களத்திற்கு தனிச் சிறப்பு தரும் சட்டத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது.

ஆசைத்தம்பி விளக்கம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கேரளத்தில் உள்ள கம்யூனிஸ்டு சர்க்கார் மூலம் அடைய முயற்சிப்பது.

“சென்ற ஆண்டில், பிப்ரவரி 20-ந் தேதி நடைபெற்ற சர்வ கட்சிப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் கலந்துகொண்டது; அவர்களுடைய கட்சிதான் இப்பொழுது கேரளத்தில் ஆட்சி புரிகிறது. ஆகவே அக்கட்சி உறுப்பினர்கள், பீர்மேடு—தேவிகுளம் பகுதிகளை தமிழ்நாட்டுடன் சேர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். வாழ்க திராவிடம்!”

பிழை திருத்துவோ நம் பத்திரிகையாளரே!

உயர் நீதிமன்றத் தீர்ப்பு

சென்னை, மே 8—

“செய்தித் தாள்களில் பிழைத் திருத்துவோரும், பத்திரிகையாளர் வேலை நிலைமைச் சட்டப்படி உழைக்கும் பத்திரிகையாளரே யாகும்” என்று, சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

அதிகப்படியாக வேலை செய்ததற்காக பிழை திருத்துவோருக்கு நஷ்டஈடு தரும்படி சென்னை தொழில் மன்றம் தீர்ப்பு அளித்திருந்ததை ஆட்சேபித்தும், பிழை திருத்துவோருக்கு பத்திரிகையாளர் சட்ட நலன்கள் பொருந்தாதென்று கூறியும் இரு செய்திப் பத்திரிகைகளின் நிர்வாகிகள் தாக்கல் செய்திருந்த ‘ரிட்’ மனுவை நீதிபதி என். இராசகோபால அய்யங்கார் நிராகரித்தார்.

சட்ட மறுப்பு இயக்கம்

பாகிஸ்தானில் நடைபெறும்

கராச்சி, மே. 6—

பாகிஸ்தானில் புதிதாக அமுல் செய்யப்பட்டிருக்கும் கூட்டுத் தொகுதி முறைக்கு எதிராகச் சட்ட மறுப்பு இயக்கம் நடத்துவதென பாகிஸ்தான் முஸ்லிம் லீக் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

1,50,000 பேர்!

பிணியால் வேதனையுறுகின்றனர்

சிங்கப்பூர், மே 7—

சிங்கப்பூரில், ஒரு ரகமான காய்ச்சல் (இன்புளுயன்சா) 1,50,000 பேரைப் பீடித்துள்ளதாகவும், இது இன்னும் அதிகரித்து வருவதாகவும் சுகாதார அமைச்சர் கூறியுள்ளார். 1919ம் ஆண்டு முதல் இத்தகைய பிணி ஏற்பட்டதில்லையாம்!

விசித்திரம் தான்!

வாஷிங்டன், மே 8—

அமெரிக்காவில் இளம் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகிறதாம்.

1956-ல் மட்டும் 10 இலட்சம் இளைஞர்கள் விசாரிக்கப்பட்டனராம்.

குடி, மேக நோய், காலித்தனம், கொள்ளை, ஆபாசம், பயங்கரப் படங்களைக் காணுதல் முதலியன பெருகி வருகிறதாம்.

ஆண்டுதோறும் 2 இலட்சம் இளைஞர்களுக்கு மேக நோய் ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆசியாவிலேயே பெரிய மருத்துவவிடுதி

சுமார் ரூ. 1½ கோடி செலவில் உருவாகும்

கான்பூர், மே 6—

2,000 படுக்கைகள் கொண்டதும் பெரிய விடுதியுடன் கூடியதுமான ஒரு மருத்துவக் கல்லூரி இங்கு அமைக்கப்பட இருக்கிறது.

இதற்கு ரூ. 1,49,00,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்குப் புதிய அணு ஆயுதத்தளம்

கான்பெர்ரா, மே 6—

அமெரிக்க அணு ஆயுதங்களின் தளமொன்று பார்மோசாவில் நிறுவப்படும் என்று ஆஸ்திரேலியாவின் தேசிய சினாவின் தூதுவர் கூறியுள்ளாராம்.

சென்னை மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

4-வது அகில இந்தியக் கைத்தறி வார விழா

34, பாந்தியான் ரோடு, எழும்பூர், சென்னை-8.

பொதுமக்களுக்கு தினந்தோறும் மாலை 4மணிக்கு திறந்துவைக்கப்படும்

9—5—1957 மாலை 6 மணி: பொதுக்கூட்டம்

தலைவர்:

திரு. பி. கக்கன், மராமத்து அமைச்சர்

பேசுவோர்: திரு. ம. பொ. சிவஞான கிராமணியார்

திரு. ஜி. இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்.,

கைத்தறி டைரக்டர்

மாலை 7 மணி: நாடகம்: ‘வாழ்வின் திருப்பம்’

—‘கோ-ஆப்-டெக்ஸ்’ நாடகக் குழுவினர்

பிரவேசக் கட்டணம் கிடையாது

திருச்சி மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகச்

செயற்குழுக் கூட்டம்

12-5-57 பிற்பகல் 3-மணிக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் திருச்சி ‘திராவிடப் பண்ணை’யில் நடைபெறும்.

ஆய்வுக்கு வருபவை:—

1. பொதுத்தேர்தல்பற்றி விவாதித்தல்; 2. உள்ளாட்சி மன்றத் தேர்தல்பற்றி ஆராய்தல்; 3. மாவட்ட மாநாடு நடத்துதல்; 4. செயலாளரால் கொண்டு வரப்படும் இதர பொருள்கள்; 5. புதிய கிளைக் கழகங்கள் பதிவு செய்தல்.

என்று, திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் அறிவிக்கிறார்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

மே

9: திண்டிவனம்

10: காலை—சிதம்பரம்
மாலை—கடலூர்

11: மாலை—நச்சாந்துப்பட்டி
இரவு—திருவப்பூர் (புதுக்கோட்டை)

12: காலை—கூறைநாடு
மாலை—மாயவரம்

13: காலை—கடலூர் (திருமணம்)

திண்டிவனத்தில்

தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்களுக்குப்

பாராட்டுக் கூட்டம்

9—5—57 மாலை 6-மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், திரௌபதை அம்மன் கோயில் எதிரில் தோழர் ஆ. தங்கவேலு தலைமையில், தோழர்கள் க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி, எம். செல்வராசு, சி. நடராசன், ஆனந்தன் ஆகியோருக்குப் பாராட்டுரை வழங்கப்படும்.

வடுகர்பேட்டை தி. மு. கழகத் துவக்கவிழா—மேதின விழா

10—5—57 மாலை 5-மணிக்கு, திருச்சி மாவட்டம் வடுகர்பேட்டை தோடி மைதானத்தில் மேற்படி விழாக்கள், தோழர் பி. அந்தோனி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் சி. மகேந்திரன், அன்பில்-தர்மலிங்கம், இ. அந்தோனி, ஆ. துரைராசன், அ. தம்புராஜ் ஆகியோர் பேசுவர்.

சென்னை—மயிலை அப்துல் மஜீத் படிப்பகத் திறப்புவிழா

10—5—57 மாலை 6-மணிக்கு, மயிலை பாட்சா தோட்டத்தில், மேற்படி படிப்பகத் திறப்புவிழா தோழர் பி. வி. ஆனந்தன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கண்ணதாசன், எஸ். எஸ். தென்னரசு ஆகியோர் பேசுவர்.

கடலூர் அ. இ. கைத்தறி வார விழாப் பொதுக்கூட்டம்

10—5—57 மாலை 6-30 மணிக்கு, டவுன் ஹாலில், திரு. என். பி. பழனியப்பன் தலைமையில் நடைபெறும்; பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

சாதிப் பெயர் அழிப்புக் கிளர்ச்சி

சட்டசபையில் ஒத்திவைப்புப் பிரேரபணை நிராகரிப்பு

சென்னை, மே 7—

திராவிட கழகத்தாரின் ‘பிராமணாள்’ என்ற சாதிப் பெயர் அழிப்புப் போராட்டத்தின் போது, சர்க்கார் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவில்லை; அதனால் எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்கவேண்டும்,’ என்றும் ‘அதற்காக சபையை ஒத்திவைக்கவேண்டும்,’ என்றும் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் ஒரு ஒத்திவைப்புப் பிரேரபணை கொண்டு வந்தார்.

இதுபற்றிப் பேசுகையில் அவர், ‘இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் கூட்டத்தை முதன் மந்திரி ஊக்குவிக்கிறார்,’ என்று குற்றம் சாட்டுகிறேன்; இவர்கள், ‘ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனையே கடிப்பது,’ என்பதுபோல, முதலில் தேசியக் கொடியை எரிக்கப்போவதாகக் கூறினார்கள்; பின்னர், பிள்ளையார் சிலையை உடைத்தார்கள்; பின்னர், இராமனையும் சீதையையும் இழிவுபடுத்தும் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள்; இப்போது ‘பிராமணாள்’ என்ற ஓட்டல் பெயரழிப்பில் ஈடுபடுகிறார்கள்; இதை வளர விடக்கூடாது,’ என்று கூறினார்.

பதிலளித்த மந்திரி சுப்பிரமணியம், ‘போதுமான போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது; நிலை ஒன்றும் கெட்டுவிடவில்லை; அமைதிக்குப் பங்கம் எதுவும் ஏற்படவில்லை; நிலைமையைச் சர்க்கார் கவனித்து வருகின்றனர்; எனவே, இந்தப் பிரேரபணைக்கு அவசியமில்லை,’ என்று கூறியிருக்கிறார்.

பிரேரபணையை சபைத் தலைவர் நிராகரித்தார்.

கிராம அதிகாரிகள் வேலை நிறுத்தம்

‘அவசரமில்லை’ என்கிறார் மந்திரி

சென்னை, மே 7—

“கிராம அதிகாரிகள் தங்கள் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்திருக்கின்றனர்; சர்க்கார் அவர்களை பிரட்டி வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு கோரியிருக்கிறது; இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து நாம் விவாதித்தாக வேண்டும்”

என்று, சட்டசபையில், தோழர் எம். கல்யாணசுந்தரம் அவர்கள் ஒரு அவசர ஒத்திவைப்புப் பிரேரபணை கொண்டுவந்தார்.

“கிராம ஊழியர்கள் கோரிக்கைகள் சமீபத்தில் தோன்றியவையல்ல; இது மிகவும் சிக்கலான விஷயம்; கடந்த 5, 6-ஆண்டுகளாகவே இது இருந்து வருகிறது; இதில் சிக்கல்கள் உள்ளன; இவற்றைத் தீர்க்க அரசாங்கம் முயன்று வருகிறது; பயமுறுத்தப்படும் வேலை நிறுத்தம் நடந்தாலும் நடைபெறாவிட்டாலும் இது அவசரப் பிரச்சினையல்ல; வேலை நிறுத்தம் நடைபெறுமென்று நான் நம்புகிறேன்” என்று, நிதி அமைச்சர் சுப்பிரமணியம், கூறியதன்பேரில், பிரேரபணை, சபைத் தலைவரால் நிராகரிக்கப்பட்டது.

சபர் விகித வருமானம் 1950—51-ல் ரூ. 254 ஆக இருந்தது; 1955—56-ல் அது ரூ. 281 ஆக அதிகரித்துவிட்டது; 1960—61-ல் அது ரூ. 330 ஆக அதிகரித்துவிடுமாம்.

மறைவு

கமுதி, மே 7—

கமுதி நகர தி. மு. கழகச் செயலாளர் திரு. கே. எஸ். காமாட்சி அவர்கள் தனது முப்பதாவது வயதில் மூன்று குழந்தைகளையும், இளம் மனைவியையும் விட்டுவிட்டு நேற்று மாலை 5 மணிக்கு அகால மரணமடைந்தார். நகர தி. மு. கழகம் அன்னாரின் பிரிவிற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் கழகக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டது. நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

(ஆ.-ர்.)

காஞ்சி நகர தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு:

“10—5—57 இரவு 10-மணிக்கு ‘திராவிட நாடு’ அலுவலகத்தின் அருகிலுள்ள தேர்தல் அலுவலகத்தில், காஞ்சி நகர தி. மு. க. பொது உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், கூட்டம் நடைபெறும்”

என்று, காஞ்சி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. வெங்கடேசன் அறிவிக்கிறார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

9—5—57 இரவு 7-மணியளவில், சென்னை 47-வதுவட்ட தி. மு. கழக இல்லத்தில், தோழர் எம். எஸ். நம்பி தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

சின்னமனூர் திரு. வி. க. படிப்பக முதலாண்டு விழா

10—5—57-ல், மேற்படிவிழா, சின்னமனூரில், தோழர் கே. மலைச்சாமி தலைமையில் நடைபெறும்; தோழர் கா. அப்பாதுரையார் அவர்கள் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.